ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.05.07 |

**(திருத்தப்பட்டவாறான) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்திற்கான திருத்தங்கள் மீதான பொதுமக்கள் ஆலோசனை**

நிதிக் குத்தகைக்குவிடுகின்ற வாடிக்கையாளர்களின் பாதுகாப்பினை வலுப்படுத்துகின்ற தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் தொழில்துறை அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தினை இற்றைப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி குத்தகைக்குவிடல் சட்டத்தினை திருத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்திருக்கிறது.

ஆர்வலர்களின் பரந்தளவிலான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக, இலங்கை மத்திய வங்கி வரைவுத் திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்கள் தமது அவதானிப்புக்களை/ யோசனைகளை/ கருத்துக்களை சமர்ப்பிக்குமாறு பொதுமக்களுக்கு அழைப்புவிடுக்கிறது. பொதுமக்கள் வரைவுத் திருத்தங்களை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்திலுள்ள பின்வரும் வெப் இணைப்பினூடாக அணுகமுடியும்.

"பொதுமக்கள் கருத்துக்களுக்கான ஆலோசனை அறிக்கைகள் | Central Bank of Sri Lanka (cbsl.gov.lk)"

பொதுமக்கள் அவர்களது அவதானிப்புக்களை/ யோசனைகளை/ கருத்துக்களை அஞ்சல், தொலைநகல் அல்லது மின்னஞ்சலூடாக **2024 மே 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ** "நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்திற்கான வரைவுத் திருத்தங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்/ யோசனைகள்/ கருத்துக்கள்" என்ற விடயத்தின் கீழ் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அஞ்சல் முகவரி: பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைநகல்: 011 2477738
மின்னஞ்சல்: dsnbfi@cbsl.lk